2011 பிப்ரவரி 8]

3. தகவல் கோரல்

(அ) வேலூர் மாவட்டம், கோபாலபுரம் வீட்டு எரிவாயு சிலிண்டர் வெடித்து 5 பேர் மரணமுற்றதற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேலூர் மாவட்டம், காட்பாடி, கோபாலபுரத்தில் எரிவாயு அடுப்பு வெடித்து 5 பேர் மரணம் அடைந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்துள்ளார். தகவல் கோரல் என்ற முறையில் அதை எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அதிகாலை வேலூர் மாவட்டம், காட்பாடி தொகுதியில், காட்பாடி, கோபாலபுரத்தில் வீட்டு எரிவாயு சிலிண்டர் வெடித்து, அங்கே வீட்டினுடைய பகுதியில் குடியிருந்த புண்ணியமூர்த்தி, சங்கீதா, கவிதா, மகேஸ்வரி ஆகிய நான்கு பேர் இறந்துபோனதாகவும், அதேபோல வீட்டினுடைய உரிமையாளர் திரு. கார்த்திகேயன், லாவண்யா, பாஸ்கரன், ஷிவாணி, பூபாலன் ஆகியோர் பலத்த காயமுற்று மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன். அங்கே இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் தீயணைப்பு நிலையத்தினுடைய பணியாளர்கள் அத்தனை பேரும் சென்றுள்ளனர். எரிவாயு சிலிண்டர் வெடித்த வெடிப்பில் வீடே சிதறி, அந்த வீட்டின் இரண்டு* portion-*கள் அமுங்கி, பல பேர் வீட்டினுள்ளே மாண்டு கிடப்பதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தச் சம்பவமே நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சருடைய வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய தெருவில்தான் நிகழ்ந்திருக்கிறது. திடீரென்று ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த வெடி விபத்தில் இறந்து கிடக்கிறவர்களில் புண்ணியமூர்த்தி, சங்கீதா, கவிதா, மகேஸ்வரி; கவிதா என்பவர் இரண்டு வயது குழந்தை; மற்றவர்கள் எல்லாம் பெரியவர்கள். திரு. புண்ணியமூர்த்தி, 60 வயது, சங்கீதா, 21 வயது, மகேஸ்வரி, 58 வயது. இறந்து போனவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு*

[திரு. சி. ஞானசேகரன்] [2011 பிப்ரவரி 8

முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 5 இலட்சம் ரூபாயும், காயமுற்று மருத்துவமனையிலே சிகிச்சை பெறக்கூடிய திரு. கார்த்திகேயன், லாவண்யா, பாஸ்கரன், ஷிவாணி, பூபாலன் ஆகியோருக்கு குறைந்தபட்சம் தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கி, அந்தக் குடும்பத்திற்கு நிவாரணத்தை அளிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் (8-2-2011) விடியற்காலையில், வேலூர் மாவட்டம், நமது சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் தொகுதிக்கு உட்பட்ட கழிஞ்சூர் மதுரா கோபாலபுரம், ஜான் சாலமன் காலனியில், கதவிலக்கம் 4-ஆம் எண் உள்ள வீட்டில் குடியிருக்கும் திரு. கார்த்திகேயன் அவர்களுக்குச் சொந்தமான இல்லத்தில், எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் வீடு இடிந்து விழுந்ததோடு, அந்த வீட்டில் குடியிருந்த ஒன்பது நபர்களில் ஐந்து பேர் அங்கேயே மடிந்திருக்கிறார்கள். மற்றவர்கள் படுகாயமடைந்த நிலையிலே மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சம்பவம் குறித்து திரு. ஞானசேகரன் மாத்திரமல்ல; சட்டத் துறை அமைச்சர் அவர்களும் எனது கவனத்திற்குக் காலையிலேயே கொண்டு வந்துள்ளார்.

விபத்தில் சிக்கி மாண்டவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, காயமடைந்து மருத்துவமனையிலே உள்ளவர்கள் விரைவில் நலம் பெற்று இல்லம் திரும்ப வேண்டுமென்றும் எனது விழைவினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதமும், காயமடைந்தவர்களுக்குத் தலா இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.